காரணமாக, முதல் தவணையாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. அதில், இப்போது தணிக்கை அறிக்கை கிடைக்காமல் அந்தப் பணத்தினைப் பட்டுவாடா செய்யக்கூடாது என்று நிதித் துறையின்மூலமாக நமக்கு ஒரு கட்டுப்பாடு உள்ளதால், அந்தத் தணிக்கை அறிக்கை பெறுவதற்காக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். அதை இந்த ஆண்டு இறுதிக்குள் எவ்வளவு தொகை முடிந்த அளவிற்கு அந்தத் தணிக்கை அறிக்கையைப் பெற்றுக் கொடுக்க முடியுமோ, கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-25

2. தகவல் கோரல்

(அ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக்கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 56-வது விதியின்கீழ் நேற்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும், இன்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். தமிழக புலனாய்வுத் துறை ஒட்டுக் கேட்கிறது, அரசியல் கட்சித் தலைவர்களின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் Subject-க்குள் போக வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். நேற்று அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். விசாரணை ஆணையமும் அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களிடம் ஏதாவது evidence இருந்தால் அங்கே போய் produce பண்ணுங்கள்.

[2008 ஏப்ரல் 16

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே C.D. கொடுத்திருக்கிறோம். C.D. இருக்கிறது. அதைப் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எல்லாம் விசாரணை கமிஷனில் கொண்டு போய்க் கொடுங்கள். எல்லாவற்றையும் விசாரணை கமிஷனில் கொண்டு போய்க் கொடுத்து, உங்கள் case-ஐ prove செய்யுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அனுமதி வழங்கப்படாத காரணத்தால் நாங்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை —தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை —தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 15-4-2008 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு உறுப்பினர்கள் 5 பேர் பேசவிருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் பேசவிருக்கிறார். அவர் பேசுவதற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னதாக ஓர் அறிவிப்பு.